சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

**Case No.OS. 261/2022**

2025ம் ஆண்டு நவம்பர் மாதம் 17ம் நாள் திங்கட்கிழமை

பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய **பி.வா.சா.1**-இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திருமதி.ஆர்.இளவரசி, எழுத்தர் நிலை-2 என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அம்பிகா | தொழில் | கூலி வேலை |
| கணவர் பெயர் | லேட். கருணாமூர்த்தி | ஜாதி | |
| கிராமம் | வண்ணாங்குளம் | சமயம் | |
| தாலுக்கா | ஆரணி | வயது | 54 |

**17.11.2025 முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் பிரதிவாதி ஆவேன். என் ஆதார் அட்டை நகல் தாக்கல் செய்கிறேன். ஆதார் அட்டை நகல் அசல் ஆவணத்துடன் சரிபார்க்கப்பட்டது. வழக்கு பற்றிய முழு விவரம் எனக்குத் தெரியும். என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைதான். என் தரப்பு சான்றாவணங்களாக, 05.04.2011 தேதியிட்ட ஆவண எண்.1668/ 2011 ஆவணத்திற்கான வில்லங்கச்சான்று இணையதள சான்று **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 10.04.2017 தேதியிட்ட ஆவண எண்.1245/2017 ஆவணத்திற்கான வில்லங்கச்சான்று இணையதள சான்று **பி.வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 16.04.2019 தேதியிட்ட ஆவண எண்.1559/2019 ஆவணத்திற்கான வில்லங்கச்சான்று இணையதள சான்று **பி.வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 16.04.2019 தேதியிட்ட ஆவண எண்.1560/2019 ஆவணத்திற்கான வில்லங்கச்சான்று இணையதள சான்று **பி.வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. (மேலே சொன்ன ஆவணங்கள் தாக்கல் செய்யப்படாமல் வில்லங்கச்சான்று மட்டும் குறியீடு செய்வதற்கு வாதி தரப்பில் ஆட்சேபனை செய்யப்படுகிறது.) வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.